## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 118/2022**

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சங்கீதா | தொழில் | : கூலி |
| கணவர் பெயர் | : அர்ஜுனன் | சமயம் | : |
| கிராமம் | : பாப்பம்பாடி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 30 |

சாட்சியையும் எதிரியும் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. லியோடைமண்ட்ராஜ் P.C.- 2391 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(1, 3ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

**1.** நான் பாப்பம்பாடி கிராமத்தில் உள்ள என் பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறேன். என்னுடன் தான் அ.சா.1 என் கணவரும் வசித்து வருகிறார். இவ்வழக்கின் எதிரிகள் எனக்கு தெரியும். 1ம் எதிரி சின்னக்கண்ணன் எனக்கு சித்தப்பா மகன். 2ம் எதிரி கஸ்தூரி எனக்கு சின்னம்மா. 3ம் எதிரி லட்சுமி என் சின்னம்மா கஸ்தூரியின் மகள்.

2. கடந்த 10.05.2022ந் தேதி பாப்பம்பட்டியில் உள்ள எங்கள் வீட்டு மனைக்குஎன் அப்பா வேலி போட்டு வைத்திருந்தார். அந்த வேலியை சின்னக்கண்ணன் பிடுங்கி போட்டுவிட்டார். எனது அம்மா மெய்யம்மாள் வந்து ஏன் வேலியை பிடுங்கினீர்கள் என்று கேட்டார். அதற்கு என் அம்மாவை அசிங்கமாக பேசி அடிக்க கட்டைய எடுத்துகொண்டு சின்னக்கண்ணன் வந்தார். என் கணவர் சின்னக்கண்ணனை மடக்கினார். அதற்கு என் கணவரை பார்த்து உன்னைதாண்டா சாகடிக்க வேண்டும்என்று சின்னக்கண்ணன் மிரட்டினார். நான் எனது அண்ணன் பூ(எ) துரைசாமியை கூப்பிடசென்ற போது லட்சுமி என்னை கல்லால் அடித்துவிட்டார். என் கணவர் அர்ஜுனனை சின்னக்கண்ணன் அடித்ததில் ரத்தம் வந்ததால் என் கணவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என் கணவருக்கு 7 தையல் போட்டார்கள். பிறகு திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். போலிசார் விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை:**

வேலி போட்டதாக சொல்லப்பட்ட இடத்திற்கு பட்டா உள்ளதா என்றால் இல்லை. அது புறம்போக்கு இடம். எங்களுக்கும் சித்தப்பாவிற்கும் எவ்வளவு இடம் என்று பிரித்து கொடுத்துவிட்டார்களா என்றால் முன்னாடியே பிரித்து கொடுத்துவிட்டார்கள். எங்கள் வீட்டிற்கும் சித்தப்பா வீட்டிற்கும் இடையில் வழி உள்ளதா என்றால் வழி இல்லை. சின்னக்கண்ணன் வீட்டிற்கும் எங்கள் வீட்டிற்கும் இடையே வழி உள்ளதா என்றால் இல்லை. சத்தம்கேட்டு தான் நான் அங்கு வந்து பார்த்தேன் என்றால் ஆமாம். அங்கு நடந்த விவரம் எனக்கு பின்னிட்டுதான் தெரியும் என்றால் நான் அங்கேதான் இருந்தேன். சத்தம்கேட்டு ஓடிவந்தபோது நான் கீழே தடுக்கி விழுந்தேன் என்றால் இல்லை. நான் மருத்துவமணையில் சிகிச்சை பெற்றேனா என்றால் பெற்றேன். எனக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்றால் தலையில். நான் கூறுவது போல் வேலி எதுவும் போடப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அவர்களுக்கு சொந்தமான இடத்தில் துணி கட்டி வைத்தபோது நாங்கள் தான் பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
**செஞ்சி.**